தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

முதலாம் ஆண்டு – முதற் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - 2015

**P101** சிறுகதையும் புதினமும்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. மறுமலர்ச்சி யுகம் பெற்றெடுத்த கலை வடிவம் எது?
2. தமிழ்ச்சிறுகதையின் முன்னோடிகளாகக் கருதப்படுபவர்கள் யாவர்?
3. நவீன சிறுகதை எழுத்தாளர்கள் இருவரைக் குறிப்பிடுக.
4. சிறுகதைகள் எவற்றை எல்லாம் கருவாகக் கொண்டு எழுதப்படுகின்றன?
5. சிறுகதைக் கூறுகள் யாவை?
6. புதுமைப்பித்தன் சிறுகதைகள் வெளிவந்த இதழ்களைக் குறிப்பிடுக.
7. அம்பை உருவாக்கியுள்ள பெண்களுக்கான அமைப்பின் பெயர் யாது?
8. மார்க்ச்சீய சிந்தனையுடைய நாவல் ஒன்றைக் குறிப்பிடுக.
9. மகேந்திரவர்ம பல்லவன் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் எது?
10. தி. ஜானகிராமனின் எந்த நாவல் திரைப்படமாகியது?
11. டானியேல் எழுதிய பஞ்சமர் கதையின் கருவினை எழுதுக.
12. சுஜாதாவின் இயற்பெயர் யாது?
13. உளவியல் ரீதியாகப் படைக்கப்பெற்ற ஆர். சூடாமணியின் இரண்டு கதைகளை எழுதுக
14. தன்னுடைய பெரும்பாலான கதைகள் எப்படி எழுகின்றன என்று சு.சமுத்திரம் கூறுகின்றார்?
15. சாகித்ய அக்காடமி பரிசுப் பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் யார்?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் குறிப்பிடுக.
2. 'ஆனந்தாயி' நாவலின் கதைக் கருவை எழுதுக.
3. 'கோபல்ல கிராமம்' நாவலின் தனிச்சிறப்பு யாது?
4. துப்பறியும் நாவலாசிரியர்கள் நால்வரைக் குறிப்பிடுக.
5. ஆர். சூடாமணியின் கதைமாந்தர்கள் எத்தகைய சிறப்பிற்கு உரியவர்கள்?
6. ஒரு நிலைப்பாத்திரம் பற்றி விவரி.
7. 'அம்மா ஒரு கொலை செய்தாள்' என்ற அம்பை சிறுகதையில் அம்மா மகள் செயல்பாட்டினை எழுதுக.
8. சிறுகதையின் தலைப்பை திறனாய்வாளர்கள் எத்தனையாகப் பிரிக்கின்றனர்? அவை யாவை?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) விடுதலைக்குப் பின்னர் நாவல் வளர்ச்சியை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சிறுகதை வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் பங்கினை விளக்குக.

2. (அ) அகிலனின் 'பொன்மலர்' நாவலின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஜெயகாந்தனின் சிறுகதைகளை விமர்சனம் செய்க.

3. (அ) இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் குடும்பம், வாழ்க்கை, சமுதாயம் பற்றிய சிந்தனைகளை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) விந்தன் சிறுகதைகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளை விரித்துரைக்க.

✱✱ ✱